# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

## TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY

(with UGC 2(f) & 12 (B)Status and NAAC Accredited with "A" Grade in 1st Cycle)

(Established under Tamil Nadu Act 33 of 2008)

Karapakkam , Chennai - 600 097.

Phone: 044 - 28389040 Website: www.tnteu.ac.in


No.TNTEU/COE/Circular/2025/700 Date: 16.09.2025

**Prof. P. Ganesan ,Ph.D**
**CONTROLLER OF EXAMINATIONS i/c** **WEB POST**

பெறுநர்

முதல்வர்கள் / நிர்வாகிகள்
அனைத்து இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

ஐயா/அம்மையீர்,

பொருள்: தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகளின் 2024-2025-ஆம் கல்வியாண்டில பி.எட். சேர்ந்து பயிலும் மாணாக்கர்களின் இரண்டாமாண்டில் மூன்றாம் பருவம் – கற்றல், கற்பித்தல் பயிற்சி - தொடங்கும் நாள் - தொடர்பாக.

பார்வை: 1. ந.க.எண் 038390/வி2/இ1/2025 நாள் :15.09.2025

******

மேற்காண் பார்வையில் குறிப்பிட்டுள்ளவாறு, 2024-2025-ம் கல்வியாண்டில் பி.எட். சேர்ந்து பயிலும் மாணாக்கர்களின் இரண்டாம் ஆண்டு மூன்றாம் பருவத்தின் கற்றல், கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசின் பள்ளிக்கல்வித் துறையின் வாயிலாக நிர்ணயித்த பள்ளிகளின் விவரங்களை கல்வியியல் கல்லூரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மாணாக்கர்கள் கற்றல் கற்பித்தல் பயிற்சியினை **2025-ம் ஆண்டு செப்டம்பர் 17–ம்** தேதி முதல் மேற்கொள்ள வேண்டும் என கல்லூரிகளுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கற்றல், கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ளும் மாணாக்கர்கள் மற்றும் பள்ளிகளின் விவரங்களை (Trainee Details to be filled by College) பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட Excel Format-ல் upload செய்யாத கல்லூரிகள் **18.09.2025** தேதிக்குள் upload செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் upload செய்யாத கல்லூரிகளை செய்முறை தேர்விற்கு அனுமதிக்க இயலாது எனத்தெரிவிக்கப்படுகிறது.

**CONTROLLER OF EXAMINATIONS i/c**

**இணைப்பு :** ந.க.எண் 038390/வி2/இ1/2025 நாள் :15.09.2025

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை – 06

ந.க.எண்.038390/வி2/இ1/2025 நாள் 15-09.2025

பொருள்: பள்ளிக்கல்வி - 2024 – 2025 - அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வியியல் படிப்பு பயிலும் ஆசிரியர்களுக்கு கற்பித்தல் பயிற்சி வழங்குதல் - சார்பு.

பார்வை:
3) தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் கடித எண் TNTEU/COE/B.Ed – TeachingPractice /2025/511 நாள் 25.06.2025
4) இவ்வலுவலக இதே எண் நாள் 01.07.2025

''''''''

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் மற்றும் NCTE விதிப்படி, இப்பல்கலைக்கழகத்தின் கீழ் இணைவு பெற்றுள்ள கல்வியியல் கல்லூரிகளில் பி.எட், எம்.எட் பயிலும் மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர் பயிற்சிக்காக சுமார் 16 வாரங்கள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு செல்கின்றன. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின்(TNTEU) வழிகாட்டுதலுடன் பள்ளிகல்வித்துறை இயக்ககத்தால் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு இந்த பயிற்சி மாணவர்களுக்கான பள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக (TNTEU) உறுப்பு கல்லூரிகளுக்கு மட்டுமே ஒதுக்கீடுகள் பொருந்தும். பிற பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த கல்லூரிகள் (தன்னாட்சி, நிகர்நிலை அல்லது வேறு) முதன்மை கல்வி அலுவலர்களை அணுகினால், அக்கல்லூரிகளுக்கு தகுந்த ஒதுக்கீட்டை CEO அளவிலேயே வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், சிறப்புக் கல்விக் கல்லூரிகள் கற்றல் கற்பித்தல் பயிற்சிக்கு பள்ளிகளை ஒதுக்கீடு

செய்யக்கோரி முதன்மைக் கல்வி அலுவலர்களை அணுகினால், அக்கல்லூரிகளுக்கு தகுந்த ஒதுக்கீட்டை தங்கள் அளவிலேயே செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது.

இவ்வொதுக்கீட்டில் தேவைப்படும் எண்ணிக்கையை விட கூடுதலாக உள்ள ஆசிரியர் பயிற்சி மாணவர்களை அருகில் உள்ள நடுநிலைப்பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளுக்கு கற்றல் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள உயர்நிலை/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அளவிலேயே நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. ஆசிரியர் பயிற்சி மாணவர்களை ஒதுக்கீடு செய்யப்பட்ட உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிக்கும், அருகிலுள்ள நடுநிலைப்பள்ளிக்கும், இரு பிரிவுகளாக பிரித்து சுழற்சி முறையில் அனுப்பி கற்றல் கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி மாணவர்களை கற்றல் கற்பித்தல் பயிற்சிக்கென எந்த பள்ளிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அந்த உயர்நிலை/மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியரே அவர்களுக்கு உரிய சான்றிதழ்களை வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, பார்வை (1) ல் காணும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகக் கடிதத்தின்படி, 2024- 2025 ஆம் கல்வி ஆண்டில் கல்லூரியில் சேர்க்கை செய்யப்பட்டு III வது பருவம் B.Ed., பயிலும் மாணவர்களுக்கு கற்பித்தல் பயிற்சி 16 வாரங்களுக்கு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் மேற்கண்ட பயிற்சிக்கான மாணவர்களின் விபரங்களை கற்றல் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ளும் பள்ளிகளின் பெயர்பட்டியல் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாணவர்களின் பெயர்பட்டியல் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, பார்வை (1) ல் காணும் கடிதத்தின் படி இணைக்கப்பட்ட மாணவர்களின் பட்டியலில் உள்ள மாணவர்களை கற்றல், கற்பித்தல் பயிற்சிக்கு, பயிற்சி பெற **15.09.2025 முதல்** சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு மாணவர்கள் வரத் தொடங்குவார்கள். அவர்களை பள்ளிகளில் பயனுள்ள வகையில் உரிய பயிற்சியில் ஈடுபடுத்திடவும், மேலும் இந்த ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தும் போது, பார்வை (2) இல் காணும் செயல்முறைகளின்படி குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றுமாறும், இந்த அறிவுரைகள் அனைத்து, அரசு / அரசு உதவி பெறும் மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளுக்கும் பொருந்தும் எனவும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு**: மாவட்ட வாரியாக ஒதுக்கீடு (மின்னஞ்சல் மூலம்)

பள்ளிக் கல்வி இயக்குநர்

9.9.25

பெறுநர்:

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்